பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஷூ பங்குனி ீ 28 உ வியாழக்கிழமை [11-04-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 129

# யுத்த நிறுத்த முயற்சியில் சுவீடன்!

கொழும்பு, ஏப்ரல் 11

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் சுவீடன் ஈடுபட்டிருப்ப தாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது இலங்கை வந்துள்ள சுவீடன் பிரதிநிதிகள் குழு ஒன்று யாழ் சென்றிருப்பதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

இரு பகுதியினரும் முன் நிபந்தனை ஏதும் விதிக்காமலேயே பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்து வதில் சுவீடன் மத்தியஸ்தம் வகிக்கலாம் என்றும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

தமிழ் — சிங்கள புதுவருடத் தினங்களில் வடக்கு, கிழக்கில் யுத்த நிறுத்தம் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும்—

இந்த யுத்த நிறுத்தம் தொடர்ந்து நீடிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுவதாகவும் —

யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து சமாதான வழிக்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கிடையில் —

அரசாங்கத்துடன் தொடர்புடைய ஒரு முக்கிய நிபுணர் ஒருவர் இன்னும் இரு வாரங்களில் இலங்கையின் பிரதிநிதியாக சுவீடன் செல்லவிருப்பதாகத் தெரியவருகிறது.

(உ-3)

# சடலங்கள் பரிமாறப்பட்டதால் நல்ல திருப்பம் உண்டாகலாம்

## சிறில் ரணதுங்க நம்பிக்கை

கொழும்பு, ஏப்ரல் 11

உயிரிழந்த சிப்பாய்களின் சடலங்களை விடுதலைப் புலிகளும் போராளிகளின் புகழுடல்களை ஸ்ரீலங்காப் படைகளும் மாறி மாறி ஒப் படைத்திருப்பது நிலைமையில் நல்ல மாற்றத்தை— திருப்பத்தை— ஏற் படுத்தக்கூடும் என்று ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க நம்பிக்கை வெளியிட்டார்.

வாராந்த அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிப்ப தற்காக நேற்று கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

கடந்த சில வாரங்களாகத் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகள் பற்றிக் கேட்டபோது —

"காப்பு நடவடிக்கைகளில் மட்டும் தாங்கள் ஈடுபடுவது எந்தப் பிரச்சினையையும் தீர்க்கப்போவதில்லை என்ப தைப் பாதுகாப்புப் படையி னர் உணர்ந்து விட்டனர். எனவே துருப்புகள் இப்போது விடுதலைப் புலிகளின் பல மான கோட்டைக்குள் தாக்கு தல் நடவடிக்கையில் ஈடுப

[3 ஆம் பக்கம் பார்க்க]

# பேசாலை அகதி முகாமினுள் ஸ்ரீலங்காப் படை அத்துமீறல்!

## 37 பேர் பலவந்தமாக கூட்டிச் செல்லப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஏப். 11

பேசாலை அகதி முகாமில் கடமையில் இருந்த ஐ. நா. அகதிகள் தூதராலய அதிகாரி களின் உத்தரவையும் பொருட்படுத்தாது நேற்றுக் காலை 8 மணியளவில் அகதி முகாமுக்குள் புகுந்த ஸ்ரீலங் காப் படையினர் அங்கிருந்து 37 ஆண்களை வயது வேறு பாடின்றிக் கைது செய்து படைமுகாமுக்குக் கொண்டு சென்றனர்.

ஐ. நா. அதிகாரிகள் "இது அகதி முகாம் உள்ளே பிர வேசிக்க வேண்டாம்" என்று கூறியபோதும் அதனைப் பொருட்படுத்தாது படை யினர் முகாமுக்குள் புகுந்த தாகக் கூறப்படுகிறது.

கைதானவர்களில் பத்துப் பேர் நேற்று நண்பகல் விடு விக்கப்பட்டனர். ஏனையோர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### மச்சந்தி முரளி



தங்கடை தீ வைக்கிற வேலைக்கு ஷெல் குண்டை யும் பயன்படுத்துகினம் போலை......!

## பலாலி இராணுவம் ஏவும் எரியும் ஷெல் குண்டுகள்

யாழ்ப்பாணம், ஏப். 11

விழுந்து, வெடித்து, சித றும் இடம் எல்லாம் தீப் பற்றி எரியக் கூடிய புதுவித ஷெல் குண்டுகளை பலாலி இராணுவத்தினர் இப்போது ஏவிவருவதாகத் தெரியவருகி றது.

ஒருவகை எரிகுண்[illegible] யைச் சேர்ந்த இந்த [illegible] வெடித்துச் சிதறும் போது அந்த இடத்தில் தீப்பிடித்து பரவுவதாகக் கூறப்படுகிறது.

இந்த ஷெல் குண்டின் சித றல்களுக்கு இலக்கானோரின் உடல்களில் பெரும் எரிகாயங் கள் மாத்திரம் ஏற்படுவதாக வும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய எரிகுண்டுகளை வீமன்காமம் பகுதியில் நிலை [illegible] தினர் நேற்று மாலையும் ஏவி யதாகவும் தெரியவந்தது.

(உ-15)

## மன்னார், காரைநகரில் இதுவரை 111 படையினர் பலி!

மன்னார் மற்றும் காரை நகர்ப் பகுதிகளில் விடுதலைப் புலிகளுடன் நடந்து வரும் சண்டையில் இதுவரை 111 பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டனர் என்றும்— 187 பாதுகாப்புப் படையி னர் காயமடைந்தனர் என் றும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க நேற்று நடை பெற்ற வாராந்த செய்தியா ளர் மாநாட்டில் தெரிவித் தார்.

## காரைநகரில் நேற்றும் சகடை குண்டு வீச்சு!

காரைநகரில் நேற்றுக் காலை 8 மணியளவில் சீனச் சகடை விமானம் குண்டு வீச் சுக்களை நடத்தியது.

பழைய கண்டி, வாரிவளவு, பாலாவோடை பகுதிகளில் குண்டுகள் விழுந்து வெடித் தன. என்றும்—

இப்பகுதிகளில் வீடுகள் மற் றும் பழையகண்டியிலுள்ள அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியன சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் நேற்று முன் தினம் மாலை 6 மணியளவி லும் பின்னர் இரவு 9 மணி யளவிலும் காரைநகர்ப் பகுதி யில் விமானக் குண்டு வீச்சுக் கள் இடம்பெற்றன (ஒ-3-15)

## லண்டனில் ஈழத் தமிழர்கள் வெள்ளி சத்தியாக்கிரகம்

லண்டன், ஏப். 11

ஈழப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியதன் அவசி யத்தை வலியுறுத்தி லண் டனில் உள்ள இந்தியத் தூத ரகத்தின் முன்னால் ஈழத் தமிழர்கள் கடந்த வெள்ளி யன்று ஒருநாள் சத்தியாக் கிரகம் ஒன்றை நடத்தினர்.

மாலை வரை நீடித்த இந்தச் சத்தியாக் கிரகத்தின் போது பல்வேறு கோசங்கள் எழுப்பப்பட்டன. சத்தியாக் கிரகத்தின் முடிவில் இந்திய தூதரகத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## பறிமுதல் பொருள்களை பங்கிடுவதில் பெரும் போட்டி!

கொழும்பில் இருந்து வரும் பயணிகளிடம் பறிமுதல் செய் யும் பொருள்களைப் பங்கிடுவ தில் இராணுவத்தினரும், வவுனியாவில் தங்கி நிற்கும் தமிழ்க்குழு ஒன்றைச் சேர்ந்த வர்களும் போட்டி போடுகின் றனராம்.

கொழும்பில் இருந்து வரும் பயணிகளை ரயில் நிலையத்தி லும், தாண்டிக்குளம் காவல் அரணிலும் வைத்து இராணு வத்தினரும், தமிழ்க்குழுவின ரும் மாறி மாறிச் சோதனை செய்கிறார்கள்.

கடும் சோதனைகள் மேற் கொள்ளப்படுகின்றன. அதன் விளைவாகப் பிரயாணிகளி டம் பல பொருள்கள் பறி முதல் செய்யப்படுகின்றன.

அவ்வாறு பறிமுதல் செய்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆரம்ப சுகாதார வழிகாட்டி பேராசிரியர் த. இராமதாஸ் F. R. C. P., D.C.H. [குழந்தை வைத்திபத்துறை, மருத்துவ பீடம்] எழுதியது: கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவி, போன்ற அனைத்து சுகாதாரப் பகுதியினர்களுக்கும் ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம்; விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி/4822]

### ரைப்ரைட்டர்கள்

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்தவும், புதிய, பழைய ரைப்ரைட்டர்கள் வாங்கவும், விற்கவும் தமிழ், ஆங்கிலம் [Stencils] வேலைகள் செய்யவும் பியூடோ 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [இ-4827]

### மணமகன் தேவை

எயர் லங்கா ஸ்தாபனத்தில் கணக்காளர் துறையில் வேலை பார்க்கும் C.I.M A. இறுதிப் பரீட்சையை முடிக்க இருக்கும் யாழ். இந்து நற்குடும்பத்தைச் சேர்ந்த அழகிய 29 வயது 5' 2'' உயரமுள்ள மகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். குற்றமற்ற சாதகம், நட்சத்திரம் பூரம் தொடர்பு 802, C/O உதயன். [4010]

### புத்தக விற்பனை

English Practice Through Tamil Medium தமிழ் மூலம் ஆங்கிலப் பயிற்சி ஆண்டு 10, 11க்குரியது ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒரு அரிய கைநூல்: ஆறு வருடங்களுக்குரிய G C E. [O/L] பயிற்சிகள் அடங்கியது. விலை ரூபா 20/- வியாபாரிகளுக்கு கழிவு வழங்கப்படும். ஆசிரியர் M. K. தில்லைமோகன். விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [இ/5934]

### விற்பனைக்கு

தமிழ், ஆங்கிலம் Standard Portable தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. பியூடோ என்ரபிறைஸஸ் 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [பஸ் நிலையம் முன்பாக] [சி-4826]

### கைமாறிவிட்டது

பருத்தித்துறை வீதி / விக்ரோறியா றோட் சந்தியில் அமைந்துள்ளகடையில் எனது றலி சைக்கிள் 03-04 91 இல் கைமாறி விட்டது. அதற்குப் பதிலாக லுமாலா சைக்கிள் இருக்கின்றது. தவறுதலாக மாற்றி எடுத்தவர் அதே கடையில் சைக்கிளை மாற்றிப் பெற்றுக் கொள்ளவும். [16405]

### வாங்கப்படும்

கால், அரை, முக்கால் போத்தல் அளவு திரவம் கொள்ளக்கூடிய சுத்தமான போத்தல்கள் வாங்கப்படும். மில்க்வைற். [சி 5939]

**Personal**
**New**
**Seience Centre**
Elilakam Front Lane,
JAFFNA.

கணித, விஞ்ஞான
**A/L 91**

**துரித மீட்டலும்**
**வினா - விடையும்**

ஆரம்பம்: 13—04—1991
சனி காலை 6-30 மணி

கணித, விஞ்ஞான
**A/L 91 & 92**
புதிய பகுதிகள்
ஆரம்பமாகி விட்டன.

- விவரங்கள் நேரில் -
[4011]

---

மல்லாகம்

## அருள்மிகு காளிகாதேவி ஆலய வருடாந்த
## சங்காபிஷேகத் திருவிழா
## ★ இன்று ★

மங்களம் அருள்வாள் மல்லையூர்க்காளி
மாவிடர் குறைகளைப் போக்கிடும் வீரி
மின்னலின் ஒளியென விளங்கிடும் ஓங்காரி
மீட்சியைத் தந்தெமைக் காத்தருள் திரிசூலி
முத்தமிழ் வளர்த்த எம் கற்பகத் திருத்தாயே
மூவுலகோர்க்கும் உன் கீர்த்தியைக் கொடுத்தாயே
மெய் அடியார்களின் வேதனையினைப் போக்கி
மேதினி எங்கனுமுன் சாதனை தனைக்காட்டி
மைவிழிப் பார்வையால் மானிடம் தனைக்காக்கும்
மொய்குழல் கொண்ட நல் மங்கை மாகாளி
மோகன முரளியின் சோதரி நீவி
மௌனத் திருளில் இவ் வையகம் மாளாது
எம் மக்களின் விடிவினுக்கோர் நற்கதிகாட்டம்மா.

மேற்படி ஆலய சங்காபிஷேகம் பங்குனி மாதம் 29 ஆம் திகதி (11 04 - 1991) வியாழக் கிழமை நடைபெற உள்ளது.

பிரசுரிப்பவர்:
மு. அற்புததேவன்

எழுதியவர்:
க. மனோகரன்

[இ-5938]

---

## கலை, வர்த்தகக் கல்லூரி
## C. C. A. 91 A/L
(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

## DAY CLASS

துரித மீட்டல் வகுப்புகளும்,
வினா - விடை வகுப்புகளும்

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | உதயன் |
| கணக்கியல் | - | ஸ்ரீ |
| வர்த்தகம் | - | இரட்ணம் |
| அளவையியல் | - | பிரபல ஆசிரியர் |
| இந்துநாகரீகம் | - | அருள்நங்கை |
| தமிழ் | - | குழந்தை |

**ஆரம்பம்: 12 - 04 - 1991**
வெள்ளிக்கிழமை காலை 8 00 மணி
[சி/5941]

---

## பாஷாண உத்வாசனமும் வீட்டுக்கிருத்ய அழைப்பும்

நிகழும் 1991 - 04 - 01 திங்கட்கிழமை காலஞ்சென்ற எமது குடும்பத் தலைவர்,

### அமரர் க. குணரத்தினக் குருக்கள்
அவர்களின்

பாஷாண உத்வாசனமும், வீட்டுக் கிருத்தியமும் எதிர்வரும் 12 - 4 - 1991 வெள்ளிக்கிழமை இருபாலை கற்பகப்பிள்ளையார் கோவிலடி குருக்கள் வளவில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் இக்கிரியைகளில் பங்குபற்றி அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி கு. இராசம்மா [மனைவி]
கு. பாலசுப்பிரமணியக் குருக்கள்,
[சுண்டிக்குளி, மருதடி,
எழும் பிள்ளையார் ஆலய குரு]
பேரப்பிள்ளைகள்.

குருக்கள் வளவு.
கோப்பாய் தெற்கு.
கோப்பாய். [16406]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் வெற்றிவேலு செல்லையா

| தோற்றம்: | திரு நிழல்: |
|---|---|
| 21 - 03 - 1910 | 12 - 03 - 1991 |

அப்பா, அப்பா என்று அன்போடு அழைப்பதற்கு நீங்கள் இருக்கிறீர்கள் என்று நாங்கள் இருக்க; துன்பக் கடலில் துடியாய் துடிக்க விட்டு, என்பெலாம் உருக ஏங்க வைத்து விட்டுச் சென்று விட்டீர்; அணைந்த விளக்கல்ல - நீங்கள்; அணையாத தீபம் அப்பா!

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், சகோதரி, மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

''இரத்தின வாசம்''
கும்பப்பிள்ளை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். [16397]

---

# பாரதிதாசன் கல்வி நிறுவனம்
## (முன்னை நாள் BECON)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

க. பொ. த. உயர்தர **கலை, வர்த்தக வகுப்புகள்**

**A/L 92**
புதிய பிரிவு
**ஆரம்பம்:**
**13-04-1991**
சனி 8-00 a.m.

**A/L 91**
மீட்டல் வினா விடை வகுப்பு
**ஆரம்பம்:**
**13-04-1991**
சனி 12-00

★ எமது கல்வி நிறுவன மாணவர்களுக்கு இவ்வகுப்பு இலவசம்.
★ வெளி மாணவர்களில் 100 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

எமது தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர் குழு

பொருளியல்:
திரு. வரதராஜன்
அளவையியல்:
திரு. S. S. மனோகரன்
கணக்கியல்:
திரு. மரியதாஸ்
திரு. சௌந்தி
வர்த்தகம்:
பிரபல விரிவுரையாளர்
திரு. லோகசிங்கம்
தமிழ்:
திருமதி மீரா
இந்துநாகரீகம்:
திரு. ஜோதீஸ்வரன்
புவியியல்:
திரு. ஜோசப்

**A/L 91**
**பகல் நேர வகுப்பு**
★ முழுப்பாடத்திட்ட வகுப்பு
★ மீட்டல் வினா விடை வகுப்பு
**ஆரம்பம்:**
**10-04-1991**

★ முன்னணி விரிவுரையாளர்கள் ஒருங்கிணைந்து கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.
★ முழுப்பாடத் திட்டமும் முற்றாக முடிக்கப்படும்.
★ வினாவிடைவகுப்பு இலவசம்.
★ [illegible] நடைபெறும்.
[16360]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### புதிய அகராதியும் அர்த்தங்களும்

அரசாங்கப் படைகள் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் தமிழ் மக்கள் மீதான தமது அட்டூழியங்களை மீண்டும் மிகத் தீவிரப்படுத்தி உள்ளன. அந்த இரண்டு மாவட்டங்களும் தமது கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டதாகவும், தமிழர்கள் இயல்பு வாழ்க்கை நிலைக்குத் திரும்பி வருவதாகவும் அரசாங்கப் படைகள் அண்மைக் காலத்தில் அடிக்கடி பொய்ப்பிரசாரம் செய்து வந்தன. தமிழர்களின் நலன்கள் கவனிக்கப்படுவதாகவும், அவர்களுக்குப் பாதுகாப்புத் தமது படைகளே என்றும் அரசாங்க அமைச்சர்களும், அதிகாரிகளும் மறுபுறத்தில் பீற்றி வந்தனர்.

ஆனால் தமிழர்களுக்குத் தாம் வழங்கும் பாதுகாப்பு எத்தகையது, அவர்களின் நலன் எனக் கருதுவது எது என்பதை எல்லாம் அட்டூழியங்கள், அக்கிரமங்கள் மூலம் படையினர் தொடர்ந்தும் காட்டி வருகின்றனர்; நிரூபித்து வருகின்றனர். தமிழர்களைக் கொல்வதே அவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு. அவர்களின் கிராமங்களை, பிரதேசங்களை பூண்டோடு அழித்து விடுவதே தமிழர்களின் நலன்களைக் காப்பது - இவையே அரசினதும், அதன் படைகளினதும் புதிய அகராதியும் அர்த்தங்களும் ஆகும்.

தமிழரின் வீடுகள் தீக்கிரை. அறுவரைக் காணவில்லை. தமிழ்ப் பெண்கள் கொலை: தமிழரின் சடலங்கள் வீதியோரங்களில் துண்டு துண்டாகப் போடப்பட்டுள்ளன. சுட்டுக் கொன்ற பின் தமிழரின் சடலங்கள் கிணற்றில். ஒரு மைல் நீளத்துக்குத் தமிழ்க் கிராமத்திற்குத் தீ வைப்பு. தமிழரின் வீடுகள் சேதப்படுத்தப்பட்டன—என்ற இந்தியாவின் பத்திரிகைத் தலைப்புகள் அரசின் புதிய அகராதிச் சொற்களுக்கு அர்த்தங்கள்!

வடக்கைப் போலவே, கிழக்கிலும் படையினரின் நடமாட்டத்தை முடக்கி விடுவதற்கு, விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களை முடுக்கி விட்டிருக்கிறார்கள். அந்தத் தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாத நிலையிலும், மோதல்களில் ஏற்பட்டு வரும் தோல்விகளினால் விரக்தியுற்ற நிலையிலும் வழமை போலவே தமிழ்ப் பொது மக்கள் மீது பழிக்குப் பழி வாங்குவதைப் படையினர் தீவிரப்படுத்தி இருக்கிறார்கள். அரசாங்கமே பிரகடனப்படுத்திய யுத்தத்தில் தாம் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைப் படையினர் மறந்து விட்டார்கள். புலிகளுடன் நடக்கும் மோதலில் ஏற்படும் தோல்விக்கு மக்கள் மீது பழி தீர்க்கிறார்கள்.

இவற்றில் இருந்து ஒன்றைப் புரிந்து கொள்ளலாம். அதாவது அரசாங்கப் படையினர் எனப்படுவோர் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதில் அதனைக் கெடுக்கும் - பாதுகாப்பு இல்லாமற் செய்யும்-ஒரு கூட்டத்தினராவார். தமிழ் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால், தமிழ்ப் பகுதிகளில் அரசாங்கத்தின் எந்த ஆயுதப் படையும், பிரிவும், குழுவும் அங்கு நிலைகொண்டிருக்கக் கூடாது. வெளியேற்றப்பட வேண்டும்.

மொத்தத்தில் தமிழர்களினதும், அவர்களின் பிரதேசங்களினதும் பாதுகாப்பும், எதிர்காலமும் உறுதிப்படுத்தப்படுவதற்கு தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து படைகள் வெளியேற்றப்பட வேண்டும். தமிழர்கள் தமக்கென சொந்தப் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

பன்முகப்படுத்தப்பட்ட நிதி

# விவசாய, வீதி அபிவிருத்திக்கு கூடுதல் பணம் ஒதுக்கப்பட்டது

## கிளிநொச்சிக்கு ரூ.30 லட்சம் மட்டுமே

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நடப்பு ஆண்டுக்கு 1991 ஆம் வருடத்துக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியாக மொத்தம் 170 லட்சம் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த நிதியில் ஆகக்கூடிய தொகையான 31 லட்சத்து 69 ஆயிரம் ரூபா, விவசாய அபிவிருத்திக்கே ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாயத் திணைக்களத்துக்கு 14 லட்சத்து 84 ஆயிரம் ரூபாவும், கமநலசேவைத் திணைக்களத்துக்கு 15 லட்சம் ரூபாவும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு 1 லட்சத்து 85 ஆயிரம் ரூபாவுமாக விவசாய அபிவிருத்திக்கு மொத்தம் 31 லட்சத்து 69 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

விவசாயத்துக்கு அடுத்து வீதி அமைப்பு, அபிவிருத்திக்கு அதிக தொகையான 30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக நேற்று யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் திணைக்களத் தலைவர்கள் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அங்கு மேற்கொண்ட முடிவின் பிரகாரம் முக்கிய திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி விவரம் வருமாறு:—

கடற்றொழில் திணைக்களம்— 15 லட்சம் ரூபா,

சுகாதாரத் திணைக்களம்— 17 லட்சத்து 50 ஆயிரம் ரூபா,

வீதி அபிவிருத்தி அதிகார சபை— 17 லட்சத்து 25 ஆயிரம் ரூபா,

வீதி அபிவிருத்தித் திணைக்களம்— 13 லட்சம் ரூபா,

கல்வித் திணைக்களம்— 17 லட்சம் ரூபா,

மற்றும் கால் நடை உற்பத்தி, உள்ளூராட்சி, வனபரிபாலன சமூக சேவைகள், காணி பயன்பாட்டுத்திணைக்களங்களுக்கும் தொழில் நுட்பக் கல்லூரிக்கும் குறைந்தளவு நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது.

மேற்படி திணைக்களங்கள் அனைத்தும் தமது வேலைத் திட்டங்கள் குறித்த உத்தேச மதிப்பீட்டு அறிக்கையை செயலக திட்டமிடல் பிரிவுக்கு வழங்கியுள்ளன. பிரஸ்தாப உத்தேச மதிப்பீடுகள் பரிசீலிக்கப்படும்போது, திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் சிறு மாற்றங்கள் செய்யப்படலாம் என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியாக 30 லட்சம் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது.

[அ-5]

### சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர் கூட்டம்

காங்கேசன் மெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

[இ]

### நாடாளுமன்ற கூட்டத் தொடர்

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் இம்மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகிறது. அன்று காலை 8-46 க்கு ஜனாதிபதி பிரேமதாஸா அங்குரார்ப்பண உரை நிகழ்த்துவார்.

## குவைத் - ஈராக் எல்லையில் ஐ. நா. அமைதிப்படை

வாஷிங்டன், ஏப். 11

குவைத்—ஈராக் எல்லையை கண்காணிக்க ஐ. நா. அமைதிப்படை ஒன்றை அனுப்புவது என்று ஐ. நா. பாதுகாப்புச்சபை ஏகமனதாக நேற்றுத் தீர்மானித்தது.

அமைதிப்படையில்ஆயிரத்து 500 வீரர்களும், 300 அவதானிகளும் இருப்பர். [இ-எ]

## பிரிட்டிஷ் யோசனை நிராகரிப்பு

ஈராக்கின் வடக்குப் பகுதியில் ஐ. நா. ஆதரவில் குர்டிஷ் மக்களை வைத்துப் பராமரிக்கப்பாதுகாப்புவலயம் ஒன்றை அமைக்கவேண்டும் என்ற பிரிட்டன் சமர்ப்பித்த திட்டத்தை ஈராக் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக நிராகரித்துவிட்டது.

இத்திட்டம் செயற்படுத்தப்படுவதைச் சகல வழிகளாலும் ஈராக் எதிர்க்கும் என்று அதன் பிரதமர் ஹமாதி நேற்று அறிவித்தார். [இ-எ]

## குர்டிஷ் பகுதிக்கு ஐ.நா. அதிகாரி

ஐ நா., ஏப்ரல் 11

ஈராக் வடக்குப் பகுதியில் வாழும் குர்டிஷ் இன மக்களின் அவல நிலை பற்றி நேரில் ஆராய ஐ. நா. ஸ்தாபனம் உயர் அதிகாரி ஒருவரை அங்கு அனுப்பி வைத்திருக்கிறது.

## ஈராக்கைத் துண்டாடும் முயற்சி அல்ல என பிரிட்டன் விளக்கம்

லண்டன், ஏப்ரல் 10

ஈராக்கில் குர்டிஷ் மக்கள் வாழ தனிப் பாதுகாப்பு வலயம் அமைப்பது ஈராக்கை துண்டாடும் ஒரு நடவடிக்கையாக அமையாது.

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் முன் கண்டவாறு சொன்னார்.

துருக்கி எல்லையுடனான மலைத் தொடர்களில் தஞ்சமடைந்துள்ள குர்டிஷ் மக்களைப் பாதுகாப்பான ஒரிடத்துக்கு அகற்றுவதே முதலாவது நடவடிக்கையாகும்.

குர்டிஷ் மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவது இரண்டாவது அம்சமாகும்.

இப்படி பிரதமர் மேஜர் மேலும் சொன்னார்.

[இ - எ]

## சுதந்திரப் பிரகடனத்துக்கு ஜோர்ஜியாவில் அங்கீகாரம்

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து தனி நாடாகும் ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடனத்தை ஜோர்ஜியா மாநில நாடாளுமன்றம் நேற்று ஏகமனதாக அங்கீகரித்தது.

1926 ஆம் ஆண்டுவரை ஜோர்ஜியா தனி நாடாக விளங்கியது. அதன் பின்னரே சோவியத் யூனியனுடன் ஒரு மாநிலமாக அது இணைக்கப்பட்டது. அப்போது இழந்து போன இறைமையை இப்போது மீட்டிருப்பதாக ஜோர்ஜியா மாநில நாடாளுமன்றம் நேற்று பிரகடனம் செய்தது.

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து தனிநாடாவது பற்றிய சர்வசன வாக்கெடுப்பு அண்மையில் ஜோர்ஜியாவில் நடத்தப்பட்டது. அதனை 90 சத வீதமான மக்கள் ஆதரித்து வாக்களித்தமை தெரிந்ததே.

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து செல்லும் சுதந்திரப் பிரகடனத்தைத் தன்னிச்சையாக வெளியிட்ட நான்காவது மாநிலம் ஜோர்ஜியா ஆகும். ஏற்கனவே எஸ்தோனியா, லத்வியா, லித்துவேனியா ஆகிய மாநிலங்கள் சுதந்திரத்தை ... மைப் பிரகடனப்படுத்தியுள்ளன. [இ-எ]

## கிழக்கில் நடந்த மோதலில் 4 படையினர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 11

கிழக்கு மாகாணத்தில் தொப்பிகலயில் விடுதலைப் புலிகளுக்கும் அரசு படையினருக்கும் இடையே இடம்பெற்ற மோதல்களில் நான்கு படையினர் கொல்லப்பட்டனர் என்றும்—

12 படையினர் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்களை ஆதாரங்காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

மன்னாரிப் பகுதியில் இடம்பெற்ற ஒரு மோதலில் 4 படையினர் காயமடைந்தனர் என்றும் அச் செய்தியில் கூறப்பட்டது. [ஓ-எ]

## ஈழ அகதிகள் மீது தீவிர கண்காணிப்பு

சென்னை, ஏப் 11

தமிழகத்தில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் அகதிகளின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனிக்கும் படி மாநில அரசு தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்ற மற்றும் சட்டசபைத் தேர்தல்களை ஒட்டியே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வசதியாக ஈழத் தமிழ் அகதிகளின் அடையாள அட்டைகள் மற்றும் அவை தொடர்பான விவரங்கள் உரிய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில்—

புதுக்கோட்டை இளம் குற்றவாளிகளுக்கான தடுப்பு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழ் அகதிகளுக்கு உணவுக்குப் பதிலாக தினமும் ஐந்து ரூபா வழங்கப்படும் என்றும் மறுவாழ்வு ஆணையாளர் தி. இராம்தாஸ் சொன்னார்.

[உ-எ]

## ஈழத்தமிழர் பிரச்சினை: மலேசிய அரசும் ஈடுபாடு

கொழும்பு, ஏப். 11

வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக மலேசிய அரசும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் அக்கறை கொண்ட சிலர் எடுத்த முயற்சிகளைத் தொடர்ந்தே கோலாலம்பூரில் இது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்க சென்னை வட்டாரங்கள் இதனை ஊர்ஜிதம் செய்தன என்று 'இந்து' நாளிதழ் வெளியிட்ட செய்தியை கொழும்புப் பத்திரிகைகள் நேற்று பிரசுரித்திருந்தன.

இதே வேளை—

சமரச முயற்சியில் ஈடுபடும்படி மலேசிய அரசை இலங்கை அரசு கோரவில்லை என்று அரசு வட்டாரங்களை ஆதாரங் காட்டி கொழும்பு ''ஐலண்ட்'' பத்திரிகை நேற்றுச் செய்தி வெளியிட்டது.

## தென்மராட்சியில் பரவலாக மலேரியா - மூளைக்காய்ச்சல்

தென்மராட்சி, ஏப்ரல் 11

தென்மராட்சிப் பகுதியில் மலேரியா, மூளைக்காய்ச்சல் நோய்களால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கடந்த மாதத்தில் மட்டும் 114 பேர் மலேரியாக் காய்ச்சலினாலும், ஆறு பேர் மூளைக்காய்ச்சலினாலும் பாதிக்கப்பட்டனர் என்று சாவகச்சேரி வைத்தியசாலை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அதேசமயம் நெருப்புக் காய்ச்சலால் பாதிக்கப்படுவோருக்கான மாத்திரைகள் இந்த வைத்தியசாலையில் இல்லாததால் இந் நோயைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ -117)

### சடலங்கள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கின்றன'' —என்று அவர் பதிலளித்தார்.

மோதல்களில் உயிரிழந்த வீரர்களின் சடலங்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் பரிமாறிக் கொண்டிருப்பது நல்ல திருப்பத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

[உ-3]

### மதுபான மொத்த விற்பனவு நிலையம்

தென்மராட்சி, ஏப். 11

பனம்பொருள் அபிவிருத்திச் சபையினர், சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில், மதுபான மொத்த விற்பனவு நிலையக் கிளை ஒன்றைத் திறந்துள்ளனர். சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கத் தலைவர் கு. தவராசசிங்கம் இதனைத் திறந்து வைத்தார். (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவின் உதவியை ஸ்ரீலங்கா நாடவில்லையாம்!

"அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மத்தியஸ்தம் செய்யும்படி மலேஷிய அரசை ஸ்ரீலங்கா அரசு கேட்டுள்ளதாகக் கூறப்படுவதில் எந்தவித உண்மையும் இல்லை"

ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் நேற்று இந்தத் தகவலை வெளியிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக தாமதப்படுத்தப்பட்டுள்ள அனைத்து அரசியல் கட்சிகள் மாநாடு, தேர்தல் முடிந்த பின்னர் மே மாதம் 13, 14, 15, 17ஆம் திகதிகள் நடத்தப்படும் என்றும் அவர் சொன்னார். [உ-எ]


## வைத்தியர் உடன் தேவை

HOLY CROSS சுக நிலையத்திற்கு முழு நேரம் அல்லது பகுதி நேரம் கடமையாற்றுவதற்கு வைத்தியர் உடன் தேவை. கீழ் காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

இல, - 149, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

[16413]


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



### அமரர் கந்தையா கனகசபை

மண்ணகம் : 1920 - 7 - 10
விண்ணகம் : 1991 - 3 - 13

12-4-1991 அன்று அன்னாரின் இல்லத்தில் சபிண்டீகரண கிரியை நடைபெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் சாயி அடியார்கள் அனைவரும் சமூகந்தந்து அன்னாரின் ஆத்மா சாந்திக்குப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அன்று பிற்பகல் 3-00 மணி முதல் 5-00 மணி வரை ஆத்மசாந்திக்கான பிரார்த்தனை [பஜனை] நடைபெறும் என்பதையும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். நன்றி.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

250, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[16411]

## மரண அறிவித்தல்

### பொன்னையா சுந்தரம்

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவில் கோகுல வீதியில் வசித்தவருமாகிய பொன்னையா சுந்தரம் 10-4-91 புதன்கிழமை காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா வள்ளியம்மை ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும், சிவஞானசுந்தரியின் அன்புக் கணவரும் ஆவார். இவர் காலஞ்சென்ற ஆறுமுகம், காலஞ்சென்ற முருகேசு, சிவக்கொழுந்து, சோமசுந்தரம் [இளைப்பாறிய அதிபர்] ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார். கனகேந்திரன் [ஜெயா], சாந்தினி [கனடா], கிருஸ்ணகுமார் [சுவிற்சலாந்து], சுரேஸ்குமார் [சுவிற்சர்லாந்து] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், பதிமகுமாரின் [நந்தன், கனடா] மாமனாரும், சுகித், பேபி [கனடா] ஆகியோரின் அம்மப்பாவும், காசிப்பிள்ளை, திருநாவுக்கரசு [பிரான்ஸ்] சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் அம்பிகைபாகனின் சகலனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. அம்பிகைபாகன்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு.

[16332]

# சரவணைக் குண்டு வீச்சில் இரு பெண்கள் உயிரிழப்பு

## 9 பொதுமக்கள் காயம்; வீடுகள், உடைமைகள் சேதம்

யாழ்ப்பாணம், ஏப். 11

சரவணை, நாரந்தனைப் பகுதிகளில் அவ்ரோ விமானம் ஒன்று நேற்று முன்தினம் இரவு வேளையில் நடத்திய கண்மூடித்தனமான குண்டு வீச்சில் இரண்டு பெண்கள் பலியானார்கள். ஒன்பது பொதுமக்கள் படுகாயமடைந்தனர். பெருமளவு உடைமைகள் நாசமாகின.

இரவு ஒன்பது மணியளவில் கரம்பன், நாரந்தனை, சரவணை, புளியங்கூடல் ஆகிய பகுதிகளை வட்டமிட்ட இந்த விமானம் ஐந்துக்கும் மேற்பட்ட பீப்பாய்க் குண்டுகளை மாறி மாறி வீசியது.

முதல் குண்டு சரவணைப் பகுதியில் முத்துலிங்கம் என்பவரது வீட்டின் மேல் வீழ்ந்து வெடித்ததில் வீடு முற்றாகத் தகர்ந்தது. இருவர் உயிரிழந்தனர்.

முத்துலிங்கத்தின் மனைவி பாக்கியலட்சுமி [வயது 55] அந்த இடத்திலேயே உயிரிழந்தார். குண்டு வீச்சு இடம்பெற்ற போது வீட்டை விட்டு வெளியே ஓடி வந்த வேலணை மத்திய கல்லூரி உயர் வகுப்பு மாணவியான சொக்கலிங்கம் பாமதி [வயது 17] தலை துண்டிக்கப்பட்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த பாக்கியலட்சுமியின் கணவரான மாணிக்கம் முத்துலிங்கம் [வயது 58] அவர்களது பிள்ளைகளான கலாமணி [வயது 24], வனிதாமணி [வயது 17] நகுலேஸ்வரன் [வயது 15] ஆகியோரும் மற்றும் சுப்பையா கந்தசாமி [வயது 54], கந்தசாமி புஸ்பலீலா [வயது 41], கந்தசாமி ரஞ்சிதகௌரி [வயது 22] கந்தையா பார்வதிப்பிள்ளை [வயது 90], வேலுப்பிள்ளை சொர்ணம்மா [வயது 45] ஆகியோரும் இச்சம்பவத்தில் காயமடைந்தனர்.

இப்பகுதியில் பத்துக்கும் அதிகமான வீடுகள் சேதமடைந்தன.

மற்றும் ஒரு குண்டு சரவணை செல்லப்பா கடைப் பகுதியில் உள்ள தோட்டம் ஒன்றில் விழுந்து வெடித்ததில் சுமார் 3 ஆயிரம் புகையிலைக் கன்றுகள் வரை நாசமாகின.

நாரந்தனை வடக்குப் பகுதியில் விழுந்து வெடித்த குண்டினால் பல வீடுகள் சேதமடைந்தன. [உ-15-125]

### இன்றுடன் 10 மாதங்கள் பூர்த்தி

கொழும்பு, ஏப் 11

வடக்கு-கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கப் படைகளுக்கும் இடையில் சண்டை தொடங்கி இன்றுடன் 10 மாதங்கள் முடிவடைகின்றன.

கடந்த ஆண்டு ஜூன் 11 ஆம் திகதி மட்டக்களப்பில் நடந்த முதலாவது மோதலுடன் சண்டை ஆரம்பமாகியது. [அ-எ]

### கொழும்பில் தமிழர் கைது

கொழும்பு, ஏப். 11

கொழும்பு நகரில் கடந்த சனிக்கிழமை இரவு பொலீஸார் திடீர் சோதனைகளை நடத்தி 300 தமிழர்களைக் கைது செய்தனர்.

இரவு 9 மணியளவில் கொட்டாஞ்சேனை, ஆமர் வீதி 4 ஆம் குறுக்குத்தெரு, புறக்கோட்டைப் பகுதிகளில் உள்ள விடுதிகள், லொட்ஜுகள் போன்றவற்றில் ஒரே சமயத்தில் சோதனை நடத்தப்பட்டு, இந்த 300 பேரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

### வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப். 11

நேற்று முன்தினம் காரைநகர் படையினருடன் நடந்த மோதலில் காயமுற்றிருந்த வீரவேங்கை நேரு [பரராஜசிங்கம் குகநாதன்— புத்தூர் கிழக்கு] நேற்று வீரமரணமடைந்தார்.

இவரது புகழுடல் இன்று புத்தூர் மாவீரர் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள மேடையில் நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

அதனைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் நடைபெற்று, கோப்பாய் மாவீரர் மயானத்தில் புகழுடல் தகனம் செய்யப்படும். [ஒ]

### மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 11

நேற்று முன்தினம் குப்பிளான் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் நடந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை வேணுகோபாலின் [திருகோணமலை] புகழுடம்பு நேற்று நீர்வேலி, போயிட்டி சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

வேங்கையின் புகழுடம்பு பின்னர் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. [ஒ]

### கிணற்றில் விழுந்து பலி!

புளியங்கூடல், ஏப். 11

முகம் கழுவ சென்றவர் தவறி கிணற்றுக்குள் விழுந்து மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வேலணை சிற்பனையில் நடந்த இந்தச் சம்பவத்தில் அதேயிட வாசியான பொ. சண்முகலிங்கம் என்பவரே மரணமானவர்.

சம்பவம் நடந்தபோது சம்பந்தப்பட்டவர் மது போதையில் இருந்ததாகக் கூறப்பட்டது. [ஒ-125]

## சீமெந்து ஊழியர்களுக்கு ரூ. 3 ஆயிரம் முற்பணம்

யாழ்ப்பாணம், ஏப் 11

காங்கேசன் துறை சீமெந்துக் கூட்டுஸ்தாபன ஊழியர்களுக்கு புதுவருட பண்டிகை முற்பணமாக 3 ஆயிரம் ரூபா வழங்கப்படவிருக்கிறது.

காங்கேசன் சிமெந்து பொதுத் தொழிலாளர் சங்கத் தூதுக்குழு கொழும்பு சென்று பொது முகாமையாளருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே முற்பணம் வழங்க ஏற்பாடாகியிருக்கிறது.

தொழிலாளர் எதிர் நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து சங்கத் தூதுக்குழு பொது முகாமையாளருடன் பேச்சுக்கள் நடத்தி இருந்தது.

பேச்சுக்களின் போது ஏற்பட்ட இணக்கங்கள்வருமாறு:

★ பண்டிகை முற்பணமாக ஆயிரத்து 500 ரூபாவும், புடைவை கொள்வனவுக்கு முற்பணமாக ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்படவிருக்கிறது.

★ தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர் ஆகியோருக்கு 3 மாதச்சம்பளம் கடனாக வழங்குதல்.

★ அமைச்சரவையால் அனுமதிக்கப் பட்ட போனஸ் விரைவில் வழங்கப்படும்,

★ மாதா மாதம் குறித்த திகதியில் சம்பளம் வழங்க புதிய நடைமுறை அமுல் செய்யப்படும்.

[ஒ-3]

### பேசாலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

படையினரின் இந்த அத்துமீறல் குறித்து முறையீடு செய்யவும்—

கைதானோரை விடுவிப்பதற்காகவும் ஐ நா. தூதரக அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

### பறிமுதல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யப் டும் பொருள்களை யார் யார் வசமாக்குவது என்பதில் இரு தரப்பாருக்கு இடையேயும் பலத்த போட்டி நிலவுகிறது.

இரண்டு ''ரின்சோ'' பைக்கெட்டுகளைக்கொண்டு வந்து, அதனை போட்டி போடும் இரு சாரரிடமும் ஒவ்வொன்றைப் பறிகொடுத்தாராம் ஒருவர். [அ-3]

## மரண அறிவித்தல்

### திரு. ஆறுமுகம் சின்னத்துரை

பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஆறுமுகம் சின்னத்துரை [ஓய்வு பெற்ற ஆசிரியர்] 10 - 04 - 91 இல் காலமானார். இவர் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், தயா [சுவிஸ்லாந்து], நித்தியா [சுவிஸ்லாந்து], திருமகள் [ஆசிரியை சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம்], நாமகள் [ஆசிரியை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி], ராதாகிருஷ்ணன் [பாரதி மகாவித்தியாலயம் வத்தேகம], இறிஸ் கந்தராசா, [பரமேஸ்வரன் [கனடா] ஆகியோரின் தந்தையும், புஸ்பநாதனின் [சுவிஸ்லாந்து] மாமனாரும், சர்மிலாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் [ஈமக்கிரிகைகள் 11 - 04 - 91 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
திருமகள்
[மகள்]

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

]16408]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org